**ஏப்ரல் – 05**

# TNPSC துளிகள்


- 4 முதல் 60 வயது வரை உள்ளவர்களுக்கு, நான்கு வகையான டெங்கு வைரஸ்களுக்கும் எதிராகப் பாதுகாப்பு அளிக்கும் 'Qdenga' (TAK-003) தடுப்பூசிக்கு இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது.
- வருமான வரித் தாக்கல், இணக்கம், மின்னணு வழி-சரிபார்ப்பு மற்றும் குறைகளைத் தீர்க்க உதவும் வகையில் கர் சாத்தி என்ற செயற்கை நுண்ணறிவு சார்ந்த சாட்பாட் தளத்தை வருமான வரித்துறை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மியான்மர் நாட்டின் நாடாளுமன்றத்தால் அந்நாட்டின் அதிபராக மின் ஆங் ஹ்லேங் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- 2027 ஆம் ஆண்டு இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்புக்கான தூதராக பிரபல மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக்கை இந்திய அரசு நியமித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான தீன் தயாள் உபாத்யாய் மற்றும் நானாஜி தேஷ்முக் பஞ்சாயத்து சதத் விகாஸ் புரசுகார் விருதுகளில் திரிபுராவின் செபாஹிஜாலா (சிறந்த மாவட்ட பஞ்சாயத்து), காஞ்சாபாரி (ஆரோக்கியமான பஞ்சாயத்து - முதலிடம்), மற்றும் வைகுந்தபூர் (பெண்கள் நட்புசார் பஞ்சாயத்து - மூன்றாமிடம்) ஆகிய மூன்று பஞ்சாயத்துகள் முதன்மையான விருதுகளை வென்றுள்ளன.
- குடியரசுத் துணைத் தலைவர் C. P. ராதாகிருஷ்ணன், சம்விதான் சதனிலுள்ள 58 சுவரோவியங்களை இந்தியாவின் நாகரிகச் சின்னங்களாக விளக்குகின்ற, சுதா மூர்த்தி எழுதிய "Tides of Time" என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
- 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 அன்று வட அட்லாண்டிக் ஒப்பந்தம் கையெழுத்தானதை நினைவுகூரும் வகையில், ஆண்டுதோறும் ஏப்ரல் 4 அன்று நாட்டோ (NATO) தினம் அனுசரிக்கப் படுகிறது.
- இந்தியாவின் கடல்சார் பாரம்பரியம் மற்றும் முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில் ஏப்ரல் 5, 2026 அன்று தேசிய கடல்சார் தினம் கொண்டாடப்படுகிறது.
  - 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Maritime India – Empowering Progress" என்பதாகும்.
- அமைதி மற்றும் தார்மீக விழுமியங்களை மேம்படுத்த ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 5 அன்று சர்வதேச மனசாட்சி தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Together for Peace: From Conscience to Collective Action" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு பருவநிலை அமைப்பு - Champions of Change


- தமிழ்நாடு பசுமை பருவநிலை நிறுவனம் (Tamil Nadu Green Climate Company) எர்த்ஷாட் பரிசு வழங்கிய உலகளாவிய அறிக்கையில் அங்கீகாரம் பெற்றுள்ளது.
- "Champions of Change" என்ற தலைப்பிலான அந்த அறிக்கை, 11 உலகளாவிய பொதுத் துறை பருவநிலை கண்டுபிடிப்புகளை முன்னிலைப்படுத்துகிறது.
- இந்நிறுவனத்தின் CARES (நெகிழ்வுத்தன்மை மிக்க சூழலமைப்புகள் மற்றும் சமூகங்களுக்கான பருவநிலை நடவடிக்கை) என்ற முன்னெடுப்பு, "இயற்கையைப் பாதுகாத்தல் மற்றும் மீட்டெடுத்தல்" பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

- இந்தத் திட்டம் ஈரநிலங்கள், காடுகள் மற்றும் கடலோரப் பகுதிகளில் பருவநிலை மாற்றத் திறனை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.
- இந்த அங்கீகாரம் பருவநிலை நிர்வாகத்தில் ஓஸ்லோ, பொகோட்டா மற்றும் லண்டன் போன்ற முன்னணி உலகப் பகுதிகளுக்கு இணையாக தமிழ்நாட்டை நிலை நிறுத்துகிறது.




# தேசியச் செய்திகள்

## இந்தியப் பாதுகாப்புத் துறை ஏற்றுமதி 2025–26




- 2025–26 ஆம் நிதியாண்டில் இந்தியாவானது ₹38,424 கோடி மதிப்பிலான பாதுகாப்பு ஏற்றுமதியைச் செய்து சாதனை படைத்துள்ளதாக பாதுகாப்புத துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இது முந்தைய ஆண்டின் ₹23,622 கோடியிலிருந்து 62.66% வளர்ச்சியாகும்.
- மொத்த ஏற்றுமதியில் பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்கள் (DPSUs) 54.84% பங்கையும், தனியார் துறை 45.16% பங்கையும் வழங்கியுள்ளன.
- பொதுத்துறை நிறுவனங்களின் ஏற்றுமதி 151% வளர்ச்சியடைந்துள்ளது, அதே சமயம் தனியார் துறை ஏற்றுமதி 14% அதிகரித்துள்ளது.

## நிகர்நிலைப் பல்கலைக்கழக அந்தஸ்து - NCERT

- தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் சபையானது (NCERT), மத்திய கல்வி அமைச்சகத்தால் ஒரு தனித்துவமான பிரிவின் கீழ் நிகர்நிலைப் பல்கலைக்கழகம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.
- பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) நிபுணர் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் இந்த அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
- இதன் மூலம் NCERT இப்போது ஆராய்ச்சித் திட்டங்கள், முனைவர் பட்டப் (PhD) படிப்புகள் மற்றும் புதுமையான கல்வித் திட்டங்களைத் தொடங்க முடியும்.
- NCERT என்பது இந்தியாவில் பள்ளிக் கல்வியை மேம்படுத்துவதற்காக 1961 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- இது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்காகப் பாடப்புத்தகங்கள், ஆராய்ச்சி மற்றும் கொள்கைகளை உருவாக்குகிறது.





## திவால்நிலை மற்றும் நொடித்தல் சட்டத் திருத்த மசோதா 2026



- இந்திய நாடாளுமன்றம், திவால்நிலை மற்றும் நொடித்தல் சட்ட (திருத்த) மசோதா, 2026-ஐ நிறைவேற்றியுள்ளது.
- தாமதங்களைக் குறைக்கவும், தீர்வு செயல்முறைகளை மேம்படுத்தவும் 2016-ஆம் ஆண்டின் திவால்நிலை மற்றும் திவாலாகுதல் சட்டத்தில் இந்த மசோதா திருத்தங்களை மேற்கொள்கிறது.
- நலிவடைந்த நிறுவனங்களை மீட்டெடுக்கவும், வணிக மதிப்பைத் தக்க வைக்கவும், திவால் கட்டமைப்பை வலுப்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒரு முக்கிய மாற்றமாக, சந்தேகத்திற்குரிய பணப் பரிவர்த்தனைகளைத் விசாரிக்கும் காலமானது திவால் மனு தாக்கல் செய்வதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை என அதிகரிக்கப்பட்டுள்ளது.
- வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த, கடன் வழங்குநர்களின் குழுவானது தீர்வு விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான காரணங்களைக் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்.

## இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறன்




- 2025-ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனில் இந்தியா உலகளவில் 3-வது இடத்தில் உள்ளதாக சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை (IRENA) தெரிவித்து உள்ளது.
- ஓராண்டில் சுமார் 45 GW கூடுதலாகச் சேர்க்கப்பட்டு, இந்தியாவின் மொத்த புதுப்பிக்கத் தக்க எரிசக்தித் திறன் சுமார் 250.5 GW-ஐ எட்டியுள்ளது.
- இதில் சூரிய ஆற்றல் சுமார் 37 GW பங்களிப்புடன் மிகப்பெரியப் பங்களிப்பாளராக உள்ளது, அதைத் தொடர்ந்து காற்றாலை எரிசக்தி வளர்ச்சி பெற்றுள்ளது.
- காற்றாலை மின்சாரம் சுமார் 6.3 GW சேர்க்கப்பட்டுள்ள அதே நேரத்தில் நீர்மின் உற்பத்தித் திறனும் அதிகரித்துள்ளது.
- 2030-ஆம் ஆண்டிற்குள் 500 GW புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை எட்டுவதற்கான இந்தியாவின் இலக்கிற்கு இது வலு சேர்க்கிறது.


# பொருளாதாரச் செய்திகள்

## முக்கியத்துவம் வாய்ந்த காப்பீட்டு நிறுவனங்கள்

- 2025–26 நிதியாண்டிற்கான உள்நாட்டு முக்கியத்துவம் வாய்ந்த காப்பீட்டு

நிறுவனங்களாக (D-SII), LIC, GIC Re மற்றும் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் ஆகியவற்றை இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) தக்க வைத்துள்ளது.

- இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், இந்தியப் பொதுக் காப்பீட்டுக் கழகம் மற்றும் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம் ஆகியவை நாட்டின் நிதி நிலைத்தன்மைக்கு மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.
- அவற்றின் பிரம்மாண்டமான அளவு மற்றும் சந்தை முக்கியத்துவம் காரணமாக இந்த நிறுவனங்கள் "தோல்வியடைய முடியாத அளவுக்குப் பெரியவை" என்று அழைக்கப் படுகின்றன.
- இந்த நிறுவனங்களில் ஏதேனும் தோல்வி அடைந்தால் அது ஒட்டு மொத்த நிதி அமைப்பு மற்றும் பொருளாதாரத்தைப் பாதிக்கும்.
- எனவே, இவை கடுமையான விதிமுறைகள், சிறந்த நிர்வாகம் மற்றும் வலுவான இடர் மேலாண்மை நெறிமுறைகளுக்கு உட்பட்டவை.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## மித்ரா திட்டம்



- ககன்யான் திட்டத்திற்காக விண்வெளி வீரர்களைச் சோதிக்க இஸ்ரோ மித்ரா திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- மித்ரா திட்டமானது (பரஸ்பர இயங்குதன்மைக் கொண்ட பண்புகளின் வரைபடம் மற்றும் பதில் மதிப்பீடு) 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 முதல் 9 வரை லே பகுதியில் நடத்தப்படுகிறது.
- தீவிரமான சூழ்நிலைகளில் நான்கு விண்வெளி வீரர்களின் உடல், மன மற்றும் நடத்தை ரீதியான செயல்பாடுகள் சோதிக்கப்படும்.
- இத்திட்டம் குழுப்பணி, முடிவெடுத்தல், மன அழுத்தத்தைக் கையாளுதல் மற்றும் தகவல் தொடர்புத் திறன்களை ஆய்வு செய்கிறது.
- இது இஸ்ரோவின் மனித விண்வெளிப் பயண மையம் மற்றும் இந்திய விமானப் படையின் விண்வெளி மருத்துவக் கழகம் ஆகியவற்றால் இணைந்து நடத்தப் படுகிறது.
- விண்வெளிச் சூழலைப் போன்ற அதிக உயரம், குறைந்த ஆக்சிஜன் மற்றும் தீவிரப் பருவநிலை நிலவுவதால் லடாக் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## பதவி உயர்வுக்கான பரிசீலனை உரிமை - அடிப்படை உரிமை




- பொதுத்துறை வேலைவாய்ப்புகளில் பதவி உயர்வுக்காகப் பரிசீலிக்கப்படும் உரிமை ஒரு அடிப்படை உரிமை என்று பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.
- நிர்வாகத் தவறு காரணமாக துறைசார் பதவி உயர்வுக் குழு (DPC) கூட்டத்தில் சேர்க்கப்படாமல் விடுபட்ட ஒரு இளநிலைப் பொறியாளர் தொடர்பான வழக்கில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.
- அரசியலமைப்பின் 14 மற்றும் 16-வது சரத்துகளின் கீழ், தகுதியுள்ள ஊழியர்கள் பதவி உயர்வுக்காக நியாயமான முறையில் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் கூறியது.
- பதவி உயர்வு என்பது உறுதி செய்யப்பட்ட உரிமை அல்ல, ஆனால் பதவி உயர்வுக்கான நியாயமான பரிசீலனை என்பது பாதுகாக்கப்பட்ட ஒரு உரிமை என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.
- நீதிமன்றம் அந்த ஊழியருக்குப் பின்னோக்கிய தேதியிலிருந்து கருத்தியல் பதவி

உயர்வு வழங்கியதோடு, பதவி உயர்வுக் குழுக்களின் கூட்டங்களைத் தவறாமல் நடத்தவும் உத்தரவிட்டது.

- இந்தக் கொள்கை இந்திய உச்ச நீதிமன்றத்தின் முந்தையத் தீர்ப்புகளைப் பின்பற்றி, அரசுப் பணிகளில் சமத்துவத்தை வலுப்படுத்துகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★